★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு

மலர் [illegible] தை 26 ஜ. ஆவ் 6 இதழ் 658

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-2-84

# பாழடைந்த வீட்டில் பயங்கர ஆயுதங்கள்!

(நமது நிருபர்)

உடுப்பிட்டியிலுள்ள ஒருவீட்டிலிருந்து 300 தோட்டாக்களும், 90 டைனமைட்டுகளும் கைத்துப்பாக்கிகளும் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்திடீர்ச் சோதனை நேற்று நடைபெற்றபோது, குறிப்பிட்ட வீட்டில் எவரும் இருக்கவில்லை என்றும், யாரும் கைது செய்யப்படவில்லை என்றும நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

பாழடைந்த ஒரு வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட மேற்படி 'ஆயுதங்கள்' ஒரு திடீர் நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டிருந்ததென்றும், உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மேற்படி திட்டம் முறியடிக்கப்பட்டது என்றும் பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி பெண்கள் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை கைது செய்யப்பட்ட இளைஞன், பொலிஸாரின் விசாரணைக்குட்டுத்தப்பட்டுள்ளான்.

(6-ம் பக்கம் பார்க்க)

★ சர்வகட்சி மாநாட்டின் அடுத்த நடவடிக்கை

# கூட்டணி-இ.தொ.கா.-காங்கிரஸ்

# ஒருகுழுவாக இணைந்தது

## இன்று முதல்கூடி ஆராயும்

(கொழும்பு)

**தமிழர் பிரச்னை சம்பந்தமான சர்வகட்சி மாநாட்டில், தமிழ் மக்களின் அதி முக்கிய பிரச்னைகளை எடுத்துரைப்பதற்காக, தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு இன்று முதல்கூடி, மாநாட்டின் செயல்பாட்டுத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.**

சர்வகட்சி மாநாட்டுத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்க் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் நேற்றுக்கூடி சுமார் இரண்டுமணி நேரம் வரை ஆராய்தது

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தலைவர் திரு எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னாள் திருகோணமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன், முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும்; தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம், திரு. மோதிலால் நேரு, திரு. கிருஷ்ணதாசன் ஆகியோரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில், அமைச்சர் எஸ். தொண்டமான், திரு. பெரிசுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நீண்ட நேரம் வரை நடைபெற்ற உரையாடலின் பின்னர் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரு குழுவாக இயங்க வேண்டும் என்று

(6-ம் பக்கம் பார்க்க)

## விசேட ஜனாதிபதி குழு

(கொழும்பு)

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் நிதிக் கணக்குகள் முறையில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆராய விசேட ஜனாதிபதிக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. லாபகரமான முறையில் இயங்காத அரசாங்க, கூட்டுத்தாபனங்களை இக்குழு இனம் காணும்.

கல்வி அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு ரணில் விக்கிரமசிங்கா மேற்படி தகவலை நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

(வெ)

## "ஈழநாடு" வெள்ளி விழா சிறப்பு மலர்

"ஈழநாடு" 25-வது ஆண்டு நிறைவை யொட்டி இம் மாதம் 11-ம் திகதி [11-2-84] வழமையான 'ஈழநாடு' பத்திரிகையுடன் விசேஷ சிறப்பு மலர் ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும்.

வாசகர்கள் தமது வழக்கமான 'ஈழநாடு' பத்திரிகையுடன் இலவசமாக இணைக்கப்படும் சிறப்பு மலரையும் கேட்டுப்பெற்றுக்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

— நிர்வாகி

## சங்கக் கடையில் கொள்ளை

(கோண்டாவில்)

சங்கக்கடையில் இரவுவேளையில் நுழைந்தவர்கள் காவலாளியைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்திக் கடையை உடைத்து சுமார் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்வேறு வகையான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கலா

6-ம் பக்கம் பார்க்க]

## இலங்கைக்கு ரூ. 130 கோடி கடனுதவி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திற்கு உதவும் முகமாக 130 கோடி ரூபாவை ஜப்பான் கடனாக வழங்கவுள்ளது

இக்கடன்; பொருட்களை வாங்குவதற்கும், திட்டவேலைகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கையும், ஜப்பானும் நேற்றுக் கைச்சாத்திட்டன.

(வெ)

உ
சிவமயம்

## திருமணத் திருமுகம்



பேரன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ருத்ரோத்காரி ஆண்டு தைத்திங்கள்

29 ம் நாள் (12-2-84)

ஞாயிற்றுக்கிழமை

மாலை 6-42 முதல் 8-12 மணி வரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறைச் செல்வன்
**கிரிதரன் (ஜே.பி.)**
விமாகி, நியு பிரசுதா,
விமாகி எலக்ரிக்கல்
சென்டர்
அவர்கட்கும்

எமது புத்திரி
சௌபாக்கியவதி
**கலாரோகினி**
அவர்கட்கும்

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கையம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருவருட் துணை கொண்டு நிகழவிருக்கும் மாங்கல்ய தாரண வைபவத்தில் சுற்றஞ் சூழ சமூகம் தந்து மணமக்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துமாறு அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

ச. மார்க்கண்டு
தம்பதிகள்
இல 4, மேதர் லேன்,
மானிப்பாய்.

மா. இராசரத்தினம்
தம்பதிகள்
"கணேச வாசா"
உடுவில் வீதி,
மானிப்பாய்.

[ இரு வீட்டார் அழைப்பு ]

672

## வெள்ளக்கொடுமை: ஓர் அன்னையின் உயிர்த்தியாகம்!

(நமது நிருபர்
இரா. உதயகுமார்)

வெள்ளத்தினால் தன் மகன் தன் முன்னாலேயே அள்ளுண்டு சென்றமையைக் கண்டு மனமுடைந்த தாயார் தானும் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சோக சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பைச் சேர்ந்த முறக்கொட்டாஞ்சேனை என்ற இடத்தில் இடம்பெற்றது.

புவன - மனோன்மணி (வயது 46) என்ற பெண்ணே இவ்வாறு கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்தவராவார்.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

''கடந்த சனிக்கிழமை காலைஞ்சென்றவர் தனது இரு பிள்ளைகளுடன் பேரில்லாவெளி என்னுமிடத்திலுள்ள தமது வயலுக்குச் சென்று கொண்டிருந்தபோது இடையில் வெள்ளம் பெருக்கெடுக்கவே இறந்தவரும் இரண்டாவது மகனும் கயிற்றின் மூலம் மறுகரையை அடைந்தனர். மூத்தமகன் கயிற்றின் மூலம் மறுகரையை அடைய முற்பட்டபோது கயிறு அறுந்து விழவே அவர் வெள்ளத்தினால் அள்ளுண்டு சென்று மரணமானார். இதனால் மனமுடை...

(6-ம் பக்கம்பார்க்க)

## வேளாண்மை அழிந்ததால் இளம்பெண் தற்கொலை

(மட்டக்களப்பு)

தமது வேளாண்மை வெள்ளத்தில் அழிந்துபோனதால் மனமுடைந்த இளம்பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்

வந்தாறுமூலையைச் சேர்ந்த கற்பகம் (17 வயது) என்ற பெண்ணே இறந்தவராவார்.

இப்பெண் 4 ஏக்கர் வேளாண்மை செய்ததாகவும் அண்மையில் பெய்த பெருமழையினால் இரது பயிர்கள் முற்றாகவே அழிந்துபோனதாகவும், இதனால் மனமுடைந்த இப்பெண் தற்கொலைசெய்து கொண்டதாகவும் மரணவிசாரணையில் தெரியவந்தது

இம்மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மட்டக்களப்பு மரண விசாரணை அதிகாரி த சிவநாதன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

(சூ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மீசாலை பழைய ஸ்ரேசனடியில் 7½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: M.T. சுப்பிரமணியம், மீசாலை தெற்கு. மீசாலை. 635

சாவகச்சேரியில் பிரபலமான இடத்தில் புடவை நிலையம் ஒன்று விற்பனைக்குண்டு. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 650 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 650

30 ஸ்ரீ தொடர் இலக்க நல்ல நிலையிலுள்ள புதிய இசுசு ஜேர்னி ரக 'M' மொடல் 26 ஆசனங்கள் கொண்ட மினி பஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி குணபாலன் துரைசிங்கம், நெடியகாடு, வல்வெட்டித்துறை. 651

மானிப்பாய் கட்டுடையில் 28பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் வயிரவநாதன் கட்டுடை, மானிப்பாய், 686

திருநெல்வேலி பலாலிவீதியில் யாழ். மாநகரசபை நீர் நிலையத்திற்கு எதிரில் 50 யார் உள்ளே வீடுகட்ட உகந்த 2 பரப்பு வெறும் காணி கிணற்றுப் பங்குடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சங்கரலிங்கம் தலங்காவல் பிள்ளையார் கோயில்வீதி, திருநெல்வேலி மேற்கு. 670

½'' H. P. (English) நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. த. கனகராஜா 48, குமாரசாமி வீதி, கந்தர்மடம். 675

## தேவை

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் இல்லம், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

தமிழும் ஆங்கிலமும் ரைப்பிங் (Typing) தெரிந்த ஒருவர் தேவை. யாழ். நகர் அருகாமையில் வசிப்பவர் நல்லது. இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. 12ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 646, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 646

கௌரவமான மூவர் கொண்ட குடும்பமொன்றுக்கு வதிவிட வசதிக்காக சிறிய வீடோ அல்லது, பகுதி வீடோ வாடகைக்கு உடனடியாக தேவை. முற்பணம் கட்டலாம், விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 640, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 640

எமது தயாரிப்புகளை வாகனம், சைக்கிள்மூலம் விநியோகம் செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. தொடர்புகொள்ளவும், குமார் ஒகனைசேஷன் மே/பா. அன்பு பிரிண்டர்ஸ், 248/5, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 687

யாழ் நகரில் ஸ்ரான்லிறோட்டில் அமைந்திருக்கும் பிரபல வியாபார ஸ்தாபனமொன்றிற்கு பெண் எழுதுவினைஞர்கள் தேவை. க.பொ.த பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், சித்தியடைந்தவர்கள் விரும்பப்படுவர். அனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். தாங்கள் கோரும் சம்பளத்துடன் 15-02-84க்கு முன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 688 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம், 683

## தேவை

ஒரு அகதிகள் குடும்பத்திற்கு வீட்டுடன் வளவும் தேவை. அதற்கு நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் காரும் மிச்சம் காசாகவும் ஒத்திகை அடிப்படையில் கொடுக்கப்படும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 689 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 689

சமநீதி அச்சகத்திற்கு உடனடியாக கொம்போசிட்டர்கள் தேவை தொடர்புகளுக்கு 6 1/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 682

A/L சித்திபெற்றவரும் சிறந்த நிர்வாகத்திறமையுள்ள வருமான இயக்குனர் ஒருவர் தேவை. வயதெல்லை 25 யாழ். மாநகர எல்லைக்குட்பட்டவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். 10-2-83 காலை 9-30க்கு நேரில் வரவும். Financial Asso-ciation 402, 1/2 கே. கே. எஸ் றோட். யாழ்ப்பாணம். (சிவன்கோவிலடி). 680

பாவிக்கப்படாத நஷனல் விடியோடெக் மொடல் NV-100 பெரிய பவர்பக்குடன் உடன் தேவை, நீகல் சவுண்ட்ஸ் 13/1, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். Tele; 23824. 666

யாழ்நகர் - திருநெல்வேலி - நல்லூர் இதைச்சார்ந்த இடங்களில் அமைதியான சூழலில் ஒரு சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு தேவை. தொடர்பு: சந்தையா 47, நோரிஸ் வீதி, கொழும்பு-11 657

## தவறிவிட்டது

பகவான் சத்திய சாயிபாபாவின் வாழ்க்கை வரலாறு-பாகம் 4 காரைநகர் தபாற்கந்தோரில் அல்லது அதற்கு அண்மையில் 2-2-84ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் என்னிடம் கையளித்தால் ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும். நிலைதம்பி கனகநாயகம், சம்பந்தர்கண்டி, காரைநகர். 691

யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் சிறிய கைப்பை (Pia-Hand Bag) தவறிவிட்டது கண்டெடுப்போர், 336, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். தொலைபேசி; 22185 தகுந்த சன்மானம் வழங்கப்படும். 667

## கல்வி

Radio and Electronic Engi neering மாணவர்களுக்கு வசதியளிக்கும் முகமாக ரூ. 25/- சேரும் பணம்கட்டி இருவாரங்கள் வகுப்பில் கலந்து கொண்டு சரியான விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம். ஆண் - பெண் இருபாலாரும் கற்கலாம். செவ்வாய்க்கிழமை (14-2-84) வரை இச்சலுகையுண்டு. தொடர்புகள்: பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 668

## TO LET

Annexe with two large bedrooms with spacious built-In cupboards, Kitchenette, Dining and living area, veranda, Bath and lavatory. Close to St Johns, Chundikuli Girls' School, Don Bosco and Kachcheri - in quiet residential area Apply Advt. No. 683 C/o Eelanadu, Jaffna. 683

## சேவை

வடமாகாணத்தில் எப்பாகத்திலும் வீடுகட்டுவதற்கு ஏற்றகாணிகள், வயல்கள், தென்னந்தோட்டங்கள், தோட்டக் காணிகள், வியாபார ஸ்தாபனங்கள் வாங்குவதற்கு / விற்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்கட்கு, (F) பைனான்சியல் அசோசியேசன், 402 ½ கே கே. எஸ் றோட். யாழ்ப்பாணம். (சிவன் கோவிலடி) 681

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவர் பதவி

(தற்காலிகம்)

இம்மன்றத்தில் மராமத்துப் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 21-02-84

ஒரு மாடு பிடித்தற்கான கூலி; ரூ. 20-00

ஒரு ஆடு பிடித்தற்கான கூலி: ரூ. 12-50

மேலதிக விபரங்கட்கு மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
6-2-84. 685

## அறிவித்தல்

### தென்மராட்சி கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

இச்சங்கத்திற்கு சொந்தமான 24ஸ்ரீ 1200 இலக்க ஸ்கூல் லொறி கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படும். வைப்புப்பணம் ரூபா 1000/-ம் கேள்விப்பத்திர பணம் ரூபா 25/ம் சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரம் பெறலாம். பூர்த்திசெய்யப்பட்ட பத்திரங்கள் யாவும் பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் என்ற விலாசத்திற்கு 24-02-84 வரை பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும், கடித உறை மெழுகிடப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் ''லொறி விற்பனை கேள்விப் பத்திரம்'' என எழுதப்படல் வேண்டும். காரியாலய நேரத்தில் லொறியை பார்வையிடலாம். லொறி விற்பனை சம்பந்தமான சகல அதிகாரங்களும் மேற்படி சங்க நெறியாளர் குழுவிற்கே உண்டு.

தலைவர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.

கொடிகாமம்,
06-02-84. 684

## குப்பைகள் அகற்றப்படுகின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள வடிகால்களிலும் மதகுகளிலும் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றும் வேலையில் யாழ் மாநகரசபை ஊழியர் ஈடுபட்டனர்.

குப்பைகள் குவிந்து கிடப்பதால் வெள்ளநீர் கடலுக்கு செல்லமுடியாது தேங்கி நின்றதைத் தொடர்ந்து வடிகால், மதகுகள் துப்பரவு வேலை நடைபெற்றது. (ச)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கச்சேரி ஆகியவற்றுக்கு மத்தியில் 28/1, கண்டி வீதியில் ஆஸ்பத்திரி வீதி சந்திக்கும் இடத்தில் ஒரு பரப்புக் காணியில் 8 படுக்கை அறை மற்றும் சகல வசதிகளுடன் உடன் குடியிருக்கத்தக்கதாக வீடு விற்பனைக்குண்டு.

ந. பேரின்பநாதன்,
அச்சக்கூட ஒழுங்கை, கொக்குவில்.

(674)

## முகாமையாளர் தேவை

எமது சகல நிறுவனங்களின் கணக்கு வேலைகளையும் கவனிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும்
அனுபவமுள்ள
முகாமையாளர் தேவை.
சகல தகைமைகளையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

### பூபாலசிங்கம் புத்தகசாலை

04, பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

பாலசிங்கம் - சுரேஸ்குமரன்



உடுவில் கற்பகக்குளையைச் சேர்ந்த பாலசிங்கம் செல்வராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சுரேஸ்குமரன் தனது 1வது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவர் நல்வாழ்வு பெற பெற்றோர், உற்றோர், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

694

## கலர் பிலிம் சுருள் இனாம்!

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம்சுருள்களை எம்மிடம் PROCESSING AND PRINTING செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். PROCESSING ரூபா 30/- P. C. PRINTING ரூபா 6-50.

### கொழும்பு ஸ்ருடியோ

யாழ்ப்பாணம். (508)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருத்ரோத்காரி வருஷம் தை மாதம் 29-ம் நாள் (12-02-84) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் 8-15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**வாகீஸ்வரன்**<br>(பொறியியலாளர், நைஜீரியா)<br>அவர்கட்கும் | எமது ஏக புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**சாந்தினி**<br>அவர்கட்கும் |

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்து மேற்படி திருமணம் கட்டுவன் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் திருமண வைபவத்தில் குடும்பசமேதராக பங்கு கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

வரவேற்பு உபசாரம்: 13-02-84 திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி தம்பையா நல்லம்மா,
''சத்தியகிரி''
கட்டுவன், தெல்லிப்பழை.

சி. தம்பிப்பிள்ளையும் பாரியாரும்,
''சாந்தி''
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

((671)

**மணிவாக்கு**

அகத்தில் எழுந்துவரும் சிரிப்பில் துன்பம் தோய்ந்திருக்கும்.

-ஷெல்லி

# நமது நோக்கு

## யாழ்ப்பாணப் பெரும்பாகம்; கிளிநொச்சி மாநகரம்

கிளிநொச்சி மாவட்டம் யாழ்ப்பாணத்திலிருந்து பிரிந்து விட்டதாகக்குறை கூறுபவர் அப்படிச் செய்யட்டும், உண்மையில் கவலைப்படுவோருக்கு கறந்த பால் முலைகேருது என்று நாம் ஆறுதல் கூறும் அவசியமில்லை; அதற்கு நேர் மாருக பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற தொடரை நினைவூட்ட விரும்புகிறோம்.

அண்மையில் அங்கு நடைபெற்ற செயலகத்திறப்பு விழாவில் உரையாற்றிய கிளிநொச்சி புதிய அரச அதிபர் திரு. என். ஜெயநாதன் இந்தமாவட்டத்தை ஒரு முன்மாதிரியான மாவட்டமாகக் கட்டியெழுப்ப மக்களின் ஆதரவைக் கோரியிருப்பது அவருடைய ஆளுமைக்கு விளக்கமளிக்கிறது.

அது மட்டுமல்ல யாழ்ப்பாணம் - கிளிநொச்சி உறவுகள் மிகநெருக்கமாகவே இருக்கவேண்டும், இருக்குமென்று அடித்துக் கூறியதில் அவருடைய தொலை நோக்கு நன்கு புலப்படுகிறது. நிர்வாகியின் திறமைக்குத் தேவையான ஆற்றல் அது.

அரசியல் எவ்வாருளுலும் யாழ்ப்பாணத்தின் விஸ்தரிப்பு கிளிநொச்சிக்கப்பாலும் செல்லும்காலத்தை நாம் இன்றே காணமுடிகிறது. மகாதேவா ஆச்சிரமம் போதி அதன் ஒரு அம்சம்.

'யாழ்ப்பாணப் படையெடுப்பு' என்று அதற்குப் பட்டம் கட்டாமல், வடபகுதி அபிவிருத்தி, எப்பகுதியின் அபிவிருத்தியையும் போன்று. ஒரு நிலைத்த நகரத்தைஅண்டி நிகழ்வதே இன்றைய உலகின் கிராம வளர்ச்சிக்கு இலக்கணமாம்.

கிராமங்கள் தங்கள் பண்புடைய இக்கள வாழ்க்கையை எவ்விதத்திலும் கைவிடலாகாது; அதே சமயம் நகரங்களின் நவீன வசதிகளுக்கு முற்றும் புறம்பான பட்டிக்காட்டு வாழ்வுக்குப் பலிபாகலாகாது.

இன்றைய கிளிநொச்சியில் நவயுகத்துக்கேற்ற வசதிகள் ஜனத்தொகை பெருக்கத்துக்கு ஏற்றவகையில் வளர்ந்து வருகின்றது கண்கூடு விவசாயம், அதற்கேற்ற பொறியியல். தொழில் நுட்பம் விருத்தியடைவதால், கிளிநொச்சி ஒரு விவசாய — தொழில் நுட்ப அடிப்படையின் துரிதமாக வளர்ச்சியடையும் நகரமாக மிக விரைவில் மாறிவரும்.

இதற்கேற்ற ஸ்தாபனங்கள் நகரத்திலும், சுற்றுப் புறத்திலும் உருவெடுக்க வேண்டியிருப்பதால், அங்குள்ள காணிகளில் கஷ்டப்பட்டு குடியேறியிருக்கும் கிளிநொச்சி மக்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படுவது இயற்கை. இவற்றைச் சமாதானமாகத் தீர்த்தது. கிளிநொச்சியின் ஆதிக்குடியிருப்பாளர்கள் 'முந்தியந்த யாழ்ப்பாணத்தவரே' ன் பதை நினைவூட்டி, நகரத்தின் வளர்ச்சிக்கு அவர்களின் ஆதரவு திரட்டுவது, அரச அதிபர் குறிப்பிட்டது போல் மிகமுக்கிய பணியாகும்.

கிளிநொச்சியில், இந்தச் சமயத்தில் நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சி நாம் குறிப்பிடும் மாநகர அபிவிருத்திக்கு பெரும் பங்களிக்கும் திட்டத்தைத் திறம்பட விளக்குகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கான பொறியியல், விவசாய பீடங்களிற்கான பெயர்ப்பலகை நாட்டும் வைபவத்தையே நாம் குறிப்பிடுகின்றோம்.

பெயர்ப் பலகைகளும் அத்திபாரக் கல்லுகளும், நாட்டின் பல இடங்களிலும் தேடுவாரற்றுக் காணப்படுகின்றன; இந்தப் பலகை அத்தகையதல்ல வென்பதை நாம் வற்புறுத்துகின்றோம்; மக்களின் மன உறுதியைக்கொண்டே அவ்வாறு கூறுகின்றோம்.

பல்கலைக்கழகங்கள் மூலைமுடுக்குகளிலெல்லாம் திறக்கப்படுவதை நாம் ஆதரிக்கவில்லை, ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் பத்தாவது ஆண்டில் வளர்ச்சியடையும் வகையில் இவ்விருமுக்கிய துறைகள் முற்ருகப் புறக்கணிக்கப்பட்டதையிட்டு யாரைக் கண்டிக்கவேண்டும்?

இலங்கையில், பொறியியல் துறைக்கு, இறைமை அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதிவழங்கப்பட்ட காலத்தில், யாழ்ப்பாணமே பெரும்பாலும் அரைவாசிக்கு மேலான இடங்களைப் பெற்றிருந்தது எல்லோருமறிந்த விடயம்.

வடபகுதி அபிவிருத்தியின் ஒருகண் விவசாயமென்றால், மற்றது பொறியியல்; தொழில் நுட்பம் இணையாத விவசாயம் விவசாயமல்ல, விவசாயத்துக்கு தேவைப்படாத பொறியியல் பகுதி இன்றுஅவ்வளவு அவசியமல்ல.

கலாநிதி கல்பகே கூறுவது போல் பூரணதிட்டமிட்டு அதனை நடைமுறைப் படுத்திய பின்னரே இத்தகைய பீடங்கள் அமைக்கப் படுவதாயின் பல்கலைக்கழகக்கல்வி என்ற மரபு அழிந்து ஒழிந்துவிட்ட காலத்தில் தான் இத்தகைய அனுவசிய வசதிகள் ஏற்படலாம்.

எல்லாம் 'றெடிமேட்' என்ற நிலையில் தொடங்கும் ஸ்தாபனங்கள் கவிழ்ந்து கொட்டுண்டு போவதை பேராசிரியர் கல்பகே நன்குணர வேண்டும் உதாரணங்கள் ஏராளம்.

எனவே இப்பீடங்கள் துரித கதியில் அமைக்கப்படவும், அவை கிளிநொச்சி நகர அமைப்புக்கு உதவவும் ஒன்றோடு ஒன்றுசேர்ந்த கிளிநொச்சி மாநகரம், யாழ்ப்பாணப்பெரும் பாகத்தின் சிறந்த நகரமாக, காலகதியில் தமிழ் மாநிலங்களின் தலைநகராகவும் திகழ, இன்று தொடக்கம் உழைப்பது தமிழ் மக்கள் அனைவரின் தலையாய கடமையாகும்.

# 'தமிழர் நெஞ்சங்களில் நிலையாகவாழுகின்ற தலைவர்

## இன்று அமரர் ஜி. ஜி. நினைவு தினம்

இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தின் விடிவெள்ளியாகத்திகழ்ந்த அமரர் ஜீ ஜீ பொன்னம்பலம் மறைந்து 7ஆண்டுகள் சென்றுவிட்டாலும் இன்றும் தமிழர் தம் நெஞ்சங்களில் நிலையாக வாழுகின்ற தகுதியினைப்பெற்றுவிட்டார் என்றால் அவர் உள்ளமும், உடலும் சலியாமல் தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் அவராற்றிய தொண்டே எடுத்துக்காட்டாகும்.

சிதறிக்கிடந்த தமிழினத்தை ஒன்றுபடுத்தி ஒரே கொடிக்குக் கீழே ஒரே கொள்கைவழியில் ஒன்றுபடுத்தி 1944ம் ஆண்டு சோல்பரிக் ஆணைக்குழுமுன் அவர் அளித்த சாட்சியம் தான் பின்னர் 50க்கு 50எனப் புகழப்பட்டது.

இலங்கையில் எதிர்காலத்தில் சிங்கள மக்கள், தமிழ் பேசும் மக்களை சகலதுறைகளிலும் பாரபட்சமாக நடத்துவார்கள் என்று இன்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே சோல்பரி ஆணைக்குழுமுன்சாட்சியம் அளிக்கும்போது மிக ஆணித்தரமாக எடுத்துக் காட்டி அவர் நிகழ்த்திய பேச்சு தமிழினத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சரித்திர நிகழ்வாகும். இது அவரது அரசியல் சாணக்கியத்திற்கும், தீர்க்கதரிசனத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.

இனப்பிரச்சினையானது இரண்டு கட்சிகளோ அல்லது இரண்டு நபர்களுக்கிடையோ நடைபெறும் பேச்சுவார்த்தைகளிலும் தீர்க்கமுடியாது சகல கட்சிகளையும் உள்ளடக்கிய வட்டமேசை மகாநாட்டின் மூலமேதான் அதற்கு நிரந்தரதீர்வுகாணலாம் என்று 30ஆண்டுகளுக்கு முன்பு ஜீ.ஜீ கூறினார் அமரர் ஜீ ஜீ இன்று இல்லை ஆனாலும் வட்டமேசை மகாநாடோ காலம் கடந்தாவது இன்று கூட்டப்பட்டுள்ளது.

**க பத்மநாதன்**

யாழ்ப்பாணத்தில் பூரணத்துவம்வாய்ந்த பல்கலைக் கழகம் ஒன்று தேவையென்பதை 20 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்த அவர் அதற்காகக் குரல் கொடுத்தார்.

அன்று அவரது வேண்டுகோள் நிறைவேறி இருந்தால் இன்று யாழ்ப்பாணத்தில் 'பூரணத்துவம்வாய்ந்த பல்கலைக் கழகம்' ஒன்று உருவாகியிருக்கும். இவையெல்லாம் அவரது தீர்க்கதரிசனங்களில் மிகச் சிலவே. அவர் தாம் வாழ்ந்த காலத்தில் தமிழினத்தின் காப்பாளனாக; வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அன்னார் தமிழர் பிரதேசம் பொருளாதாரத் துறையில் வளம்பெற்றிருக்கவேண்டும் என்பதற்காகப் பல தொழிற்சாலைகளை நிறுவினார். காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலையும், வாழைச்சேனையில் காகிதத்தொழிற்சாலையும், பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலையும் அவரால் உருவாக்கப்பட்டவையே இன்னும் புல்மோட்டையில் இல்மனைட் தொழிற்சாலையும் உருவாவதற்கு வித்திட்டவரும் அன்னாரே.

அன்னார் சிறுகைத்தொழில் பட்டுப்பூச்சி வளர்ப்பு, குறிப்பாக பனம்பொருள் அபிவிருத்தி. சிறுகுடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டதோடு அவற்றை ஆரம்பித்து வைத்த பெருமையும் அவருக்குரியதே.

அன்னாரின் முயற்சியினாலே தான் கடற்தொழில் நவீன மயமாக்கப்பட்டது பொற்தொழிலாளருக்கு 'கோட்டா' முறையில் பவுண் வழங்கப்பட்டமையும் அமரர் ஜீ. ஜீ பொன்னம்பலம் காலத்தில்தான்.

இவர் போல் எவரும் இன்றுவரை தமிழர் பிரதேசத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் கிடையாது தமிழினத்தின் சாபக்கேடு நல்லன செய்பவர்களுக்கு எதிர்ப்பு என்றும் தமிழினத்தில் இருந்துள்ளது

இலங்கையின் தேசியக்கொடியில் முஸ்லிம் இனத்தையும், தமிழ் இனத்தையும் குறிக்கும் இரண்டு நிறங்களையும் தமது அயராத முயற்சியினால் இடம் பெறச்செய்தவர் அவர்

இலங்கைப் பாராளுமன்றத்தில் முதன் முதல் தமிழில் பேசிய தலைவர். உலகமன்றமாகிய ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒருநாட்டுக்கு தலைமைதாங்கிச் சென்று, அச்சபையிலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்கத் தமிழ் இலக்கியத்தை முழங்கிய உலகத்தின் முதல் தமிழ்மகன் அமரர் ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்களே.

துவளாத நெஞ்சு; தூங்காத உணர்வு; துயர்களுக்கு அஞ்சாமல் ஈடுகொடுக்கும் வலிமை; அயராத உழைப்பு இவை அவரின் தனியான ஆளுமைத்திறன் இவைகளே இவரை உலகப்புகழ் பெற்ற வழக்கறிஞராக்கியது. தென்கிழக்காசியாவிலே வழக்குரைப்பதில் தனக்கென ஒரு பாணியமைத்த பெருமைக்குரியவர்.

சட்டத்துறையில் அவர் நிலைநாட்டிய சாதனைகள் எமது அண்மைக்கால வரலாற்றில் எவராலும் முறியடிக்க முடியாதவையே அவர் ஆஜராகிய வழக்குகளில் 1962ம் ஆண்டின் புரட்சிச்சதி வழக்கும், ரஞ்சனி ராக்ஸி வழக்கும், ட்றயல் அற்பார் வழக்கும் ஒருசிலவாகும். இலங்கையில் அவர் ஆஜராகாத நீதிமன்றங்களே கிடையாது. தான் ஆஜராகிய ரஞ்சனி ராக்ஸி வழக்கின் மூலம் 2000 ஆண்டுகளாக இங்கிலாந்திலும், காமன்வெல்த் நாடுகளிலும் நடைமுறையில் இருந்த விரதைடயாளச்சட்டத்தை மாற்றியமைத்தது. உலகப்புகழ்பெற்ற 'ஸ்கொட்லண்ட்யார்ட்' துப்பறியும் பிரிவினரையே ஆச்சரியத்திலும், வியப்பிலும் ஆழ்த்திய சட்டமாமேதை அமரர் ஜீ. ஜீ.

தன்னலம் துறந்து, பிறர் நலம் பேணும் பெரியராகத் திகழ்ந்து தமிழ்மக்களுக்கும், மொழிக்கும் அளப்பெரும் தொண்டாற்றிய இவரது வரலாறு தமிழினத்தின் வரலாறு தனித்தனியாக ஆராய்ந்து வெளியிடப்படவேண்டிய ஒன்ருகும். (க)

# மக்கள் கருத்து

## கல்லூரி நாட்காட்டி

யாழ்நகரின் ஒரு பிரபல கல்லூரி 1984க்கான நாட்காட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த வெளியீட்டில் சைவ சமய குரவர்களின் குருபூசை நாட்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. சைவசமயத்தில் சமயக்குரவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர். இந்த நாட்காட்டியை வெளியிட்ட கல்லூரி அதிபர் ஒரு சைவ சமயக் குரவரது குருபூசை நாளை மறந்துவிட்டார் போலும்.

வேடிக்கை என்னவென்றால் சைவசமயத்தில் 63 நாயன்மார்களைப் பற்றியே பேசப்படுகின்றது. அவர்களில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிமூவர். நான்காவது சைவசமயக்குரவராகிய மணிவாசகரை மாணிக்கவாசக நாயனார் என்று சைவசமயிகள் சொல்லுவதில்லை கல்லூரி வெளியிட்ட நாட்காட்டியிலே மாணிக்கவாசக நாயனார் என்று அச்சிடிட்ருப்பது விந்தையே. இதனை கல்லூரிச் சரியாக புரியாத இளம் மாணவர் சமயத்தின் உண்மையை அறிவதில் நல்ல பயிற்சி அடையமாட்டார்கள். முதல் மூவரும் இயற்றியவை தேவாரங்கள். மணிவாசகர் அருளியது திருவாசகமும், திருக்கோவையாரும்.

குறிப்பிட்ட கல்லூரியில் படிப்பிக்கும் ஏனைய சைவ சமய ஆசிரியர்களுடன் கலந்து ஆலோசித்து இந்த நாட்காட்டியை வெளியிட்டிருந்தால் இத்தகைய தவறுகள் ஏற்பட்டிருக்காது.

வெ சு. நடராசா.
நல்லூர்.

# வண்ணார்பண்ணையின் பெருமை!

யாழ்ப்பாணத்து நல்லூருக்கு மேற்கில் அமைந்த பெரும் பகுதி வண்ணார்பண்ணை என வழங்கியது போத்துக்கேசர் வருவதற்கு முன்னரே இப்பிரதேசம் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது படித்தவர்களும் பெரியவர்களும் நெருக்கமாக வாழ்ந்த பிரதேசத்தில் வணிகம், கைத்தொழில், கலைகள் முதலியன வளம்பெற்றுச் சிறந்து விளங்கின; வண்-கிழக்குப் பகுதியிலே வீரமாகாளியம்மன் கோயிலும், தமிழரசரின் ஆலைகளின் பந்தியும், அம்மைச்சிநாச்சியின் குளமும் அரச வெளியும் புகழ்பெற்ற பகுதிகளாயிருந்தன நல்லூரிலிருந்து கைலாசபிள்ளையார் கோயில், செட்டியார் சிவன் கோயில், சைவப்பிரகாச வித்தியாசாலை. நாச்சிமார்கோயில், தலையாளி ஞானவைரவ கோயிலடியிருந்து சுற்றுவட்டமாக நாவலர் கால் தோயவும் பலவிடங்கிலும் சென்று சென்று சைவமும் தமிழும் வளர்த்தவர் வண்ணார்பண்ணையை நாவலர் நகரம் என வழங்கிலும் நல்லது

—மில்க்வைற் செய்தி

# லெபனுன் அரசாங்க வானெலி தீவிரவாதிகள் வசமானது!

## மேற்கு பெய்ரூட்டையும் கைப்பற்றினர்

பெய்ரூட், பெப். 8

**லெபனுனின் தலைநகரான பெய்ரூட்டின் மேற்குப் பகுதியை முஸ்லிம் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளனர். லெபனுன் அரசாங்க நிர்வாகத்தில் இருந்து வந்த வானெலி நிலையத்தையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.**

லெபனுன் இராணுவத்துக்கும், ருரூஸ், ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு மிடையே கடந்த ஐந்து தினங்களாக தீவிரமடைந்திருந்த சண்டையில் நேற்று லெபனுன் இராணுவத்தினர் தோல்வி அடைந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

நேற்று நடைபெற்ற பலத்த சண்டையில் லெபனுன் இராணுவத்தினர் பின்வாங்கியதைத் தொடர்ந்து மேற்கு லெபனுனை முஸ்லிம் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

பெய்ரூட் விமான நிலையத்திலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்தின்மீது நேற்றும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கதூதரக அதிகாரிகள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் றேகன் நீகன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதரகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் ஆழ்கடலில் உள்ள அமெரிக்க கப்பலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பெய்ரூட்டிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பெய்ரூட் விமான நிலையம், மத்திய தரைக்கப்பல் பாதை என்பன தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. (கு)

## ராணுவவீரர்களுக்கு எதிரான ஈரானிய நடவடிக்கைகள்!

### மக்கள் கட்சி பலத்த கண்டனம்

பொன், பெப். 8

துடே கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று கூறி சில இராணுவ வீரர்களுக்கெதிராக ஈரானிய அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஈரானிய மக்கள் ஸ்தாபனம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இராணுவ நீதிமன்றத்தில் இந்த இராணுவ வீரர்கள் சட்டத்துக்கும் அரசியலமைப்புக்கும் புறம்பான வகையில் விசாரணைக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். உள, உடல் ரீதியான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ள இந்த வீரர்கள் மீதான விசாரணைகளின்போது, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ, நடுநிலை வகிக்கும் சர்வதேச அவதானிகளோ, வேறு மக்களோ அனுமதிக்கப்படவில்லை, என்றும் இக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய உழைக்கும் மக்கள் கட்சியின் கொள்கையையும் நடவடிக்கைகளையும் ஊறுபடுத்தும் நோக்கம் கொண்டவர்களது செயலே இது. ஏகாதிபத்திய, பிற்போக்கு வாதிகளின் இந்த நடவடிக்கைகளை எதிர்க்கும் ஈரானிய மக்கள் தமது புரட்சியின் உயர் நோக்கங்களையும் சுதந்திரம், விடுதலை, நீதி, சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றையும் பாதுகாக்க தன்னலமின்றிப் போராடுவர் என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## சவூதி அரேபியாவிலும் அமெரிக்க ஏவுகணை!

சைப்ரஸ், பெப். 8

அமெரிக்க ஏவுகணைகளை வைக்கும் பலதளங்களை தனது மண்ணில் நிறுவ அமெரிக்காவுக்கு சவூதி அரேபியா அனுமதியளித்துள்ளதாக சைப்ரஸிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இத்தளங்களில் அமெரிக்காவின் மத்திய ஆணைத் தளத்தின் கீழ் உள்ள அதிரடிப் படையைச் சேர்ந்த 15,000 துருப்புக்கள் வைக்கப்படவுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

சோவியத் யூனியனைச் சுற்றி அமெரிக்க ஏவுகணைகளை வைத்து, உலகின் பல பாகங்களில் அமெரிக்காவின் தளங்களை உருவாக்கும் திட்டத்தின் ஆரம்பமாகவே மேற்கைரோப்பாவில் ஏவுகணைகள் வைக்கப்பட்டது அமைந்திருந்தது என்று மாஸ்கோ குற்றம் சாட்டியுள்ளது

அதே வேளையில், அமெரிக்க ஜனதிபதி றீகன் அண்மையில் வெளியிட்ட செய்தி ஒன்றில் மெய்யாகவும் நியாயமாகவும் அணுவாயுதங்களைக் குறைப்பதும் மத்திய கிழக்கு மத்திய அமெரிக்கா, தெற்கு ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வதுமே அமெரிக்காவின் நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தார். (கு)

## இந்தியப் பிரதமர் இந்திரா எதிர்கட்சியினருடன் பேச்சு

(புதுடில்லி)

இந்திய அரசாங்கத்துக்கு பிரச்சினைக்குரியதாக இருந்து வரும் பஞ்சாப் நிலைகுறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தியாவின் 16 எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்ற இப்பேச்சுவார்த்தைகளில் எதிர்க்கட்சித் தலைவர்களான சரண்சிங், ஜெகஜீவன்ராம் வி. சந்திரசேகர், திருமதி சத்தியவாணிமுத்து உட்பட பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. (கு)

## இன்றைய பலன்

தை மாதம் 26ம் திகதி

9—2—84

வியாழக்கிழமை

மேடம்: எதிலும் விரக்தி நிலை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல்நலம் கெடும். பொருளும் செலவாகும்.

இடபம்: கல்வித்துறையில் முன்னேற்றம் தோன்றும். ஆசிரியர்கள் போற்றப்படுவர். இன்று ஏற்படும். புதிய திருப்பம் நிம்மதியை அளிக்கும். வாகன நலமுண்டு.

மிதுனம்; தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால எண்ணம் தலைதூக்கும். அடுத்துக்கெடுப்பதுக்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலப்படக் கூடிய செய்திக்கும் இடமுண்டு.

கடகம்: மதி நுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம் அறிஞர் ஒருவரின் சந்திப்பு ஏற்படலாம் அறவழி நாட்டமும் உண்டு.

சிம்மம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம்.

கன்னி: நலன்தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு நேர்மை வழிநிற்பீர்கள் பெரியோர் ஆதரவும் கிட்டும்.

துலாம்: வியாபாரத்தில் நஷ்டமடைய இடமுண்டு தொழில்துறையில் தொல்லைகள் தோன்றக்கூடும் அதிக பேச்சை தவிர்த்துக்கொள்ளவும். அவப்பெயர் உண்டு.

விருட்சிகம்: கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர். மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கு இலக்காவீர்கள். பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். மௌனம் விரும்பத்தக்கது.

தனுசு: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்னிற்பீர்கள். தெய்வ, குருபக்திக்கும் இடமுண்டு மற்றவர்கள் உங்களைப் பின்பற்றக்கூடிய சூழ்நிலைஉருவாகலாம். நல்ல நாள்.

மகரம்: புதிய தொழில், புதுமனை குறித்து சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு பணபலமுமுண்டு. பயணங்களும் இடம் பெறும்.

கும்பம்; துள்ளிவரும் வெள்ளிப் பணம் புதிய நண்பர்களைக் கொண்டுவரும். மக்களின் பணியே மகேசன் பணியாகக் கருதுவீர். அறவழிமூலம் மற்றவர்களின் ஆதரவைப்பெறுவீர். பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

மீனம்: நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர்வீண் பழிக்கும் இலக்காவார்கள் விஷமிகள் தொல்லை புதிய உருவை எடுக்கும். பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம். தணிகசலுடன் எதிர் நீச்சல்போட்டால் வெற்றியுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்

## பஞ்சாப்பிரச்னைகுறித்துபேச

### எப்பொழுதும் தயார்'

### எதிர்க்கட்சியினர் மத்தியில் இந்திரா

புதுடில்லி, பெப். 8

பஞ்சாப நிலைகுறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, அகாலிதள் தீவிரவாதிகள் உட்பட எந்த ஒரு எதிர்க்கட்சியினருடனும் எதிர்ப்பு வைத்திருக்க தாம் விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்

பஞ்சாப்பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது அவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர்மேற்கண்டவாறு கூறினர்

அகாலிதள் கட்சியினரின் கோரிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கும் தாம் தயாராக இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''அகாலிதள்களின் பிரதேச கோரிக்கையைஏற்றுக்கொள்ள முடியாது ஆனல் அவர்களின் மத சம்பந்தமான கோரிக்கையை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம்.

''வழிபாட்டுத் தலங்களை காவற்படையினரால் தேடப்படுபவர்கள் ஒழிந்து கொள்வதற்கோ, ஆயுதங்களைப் பதுக்கி வைப்பதற்கோ பயன்படுத்த அனுமதிக்க முடியாது.



''ஹர்த்தால் நடத்துவதால் எதனையும் சாதித்துவிட முடியாது அரசியலமைப்புச் சட்டத்தின் 25வது சரத்தை திருத்த வேண்டும் என்பதையும் முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது''. (கு)

## சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன

(வேலணையில்)

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற இனக்கலவரம் காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கி இருந்தவர்களுக்கு சமையலுக்கான அலுமினிய பாத்திரங்கள் நல்லூர் சமநலச் சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இக்கலவரம் காரணமாக இடம்பெயர்ந்த தனியார் துறை ஊழியர், வர்த்தகர்களுக்கு 11-ம், 12-ம் கட்ட உணவுப் பொருட்கள் நல்லூர் பல நோக்குகூட்டுறவுச் சங்க மூலம் விநியோகிக்கப்பட்டது.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் —லதா
**சிரித்து வாழ வேண்டும்**
(கலர் - புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி - ஸ்ரீவித்யா
**இமயம்**
(புதிய வண்ணப் பிரதி)

7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மகிமைமிகு மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
மோகன் பூர்ணிமா
**பயணங்கள் முடிவதில்லை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-30,
ஜெமினி - தேவிகா
**இதயத்தில் நீ**
நாளை முதல்
**நட்சத்திரம்**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
குறிப்பிட்ட சில
தினங்களுக்கு மட்டும்
சிவகுமார் - ராதா
வெச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
**நீதிக்கு தலைவணங்கு**

கடைசி வாரம்
**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**
(ஈஸ்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்)
இன்று மட்டும்
**நல்லநேரம்**

10-2 84 வெள்ளி முதல்
இந்தியாவில் முதல்முறை திரையிட்டபொழுது தடைசெய்யப்பட்டு மீண்டும் திரையிட்டபொழுது 175 நாட்களுக்கு மேல் ஓடி வசூலில் சாதனை நிலைநாட்டிய படம்.



கமல்— ஸ்ரீதேவி— தீபா
**மீண்டும் கோகிலா**
(ஈஸ்மன் கலர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
இலவசுகவின்
இன்பக் காவியம்

யாழ். அபிவிருத்திச் சபை

## விவசாய பொறியியல் பீடங்களுக்கு

# ரூ. 50 லட்சம் ஒதுக்கியது!

## ஜனாதிபதிக்கு யாழ். பிரஜைகள் குழு செயலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபை அதற்கு 1984ல் ஒதுக்கப்பட்ட நிதியில் 50 லட்சம் ரூபாவை விவசாயம், பொறியியல் பீடங்களை ஆரம்பிப்பதற்காக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு வழங்கியுள்ளது. எனவே வடக்கு கிழக்கில் இல்லாத பீடங்களை ஆரம்பிக்கவும்.

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு யாழ். பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நடைபெற்ற மகாநாட்டில் மாணவர்களது பிரச்னையை உணர்ந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்க விரும்பும் இடம் பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து செயலாற்றுவதற்கென ஒரு குழுவை நியமித்தீர்கள்

அந்நேரத்தில் இப்பொழுது வடக்கிலோ, கிழக்கிலோ இல்லாத பொறியியல், விவசாயம் சட்டம், பல் வைத்தியம் போன்ற பீடங்களை நிறுவினால் மட்டுமே சில இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வசதியளிக்க முடியுமென்று சுட்டிக்காட்டப்பட்டது குறித்த பீடங்களை உருவாக்கும்வரை ஒரு வருட காலத்துக்கேனும் பொறுத்திருக்கத் தயாரெனவும் மாணவர்கள் தெரிவித்திருந்தனர் விவசாயம், பொறியியல்பீடங்களுக்கு வேண்டிய காணிகள் சுவீகரிக்கப்பட்டு விட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது

மேலும் சட்டபீடம் ஆரம்பிப்பதற்குவேண்டிய இடவசதி, தளபாடம், விரிவுரையாளர்கள் உள்ளபடியால் அதனை ஆரம்பிப்பதற்கு எவ்வித கஷ்டமும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது அவ்வேளையில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர், ஓர் நல்ல நூல் நிலையம் அதற்கு அவசியமென்று கூறியபொழுது பீடத்தை ஆரம்பித்தாற்றான் ஓர் நல்ல நூல்நிலயத்தை உருவாக்கமுடியுமென்று எடுத்துக் கூறினேன்

சட்டபீடத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாண வளாகத்தை உருவாக்குவதற்கு 25-7-1974ல் 125/5ம் இலக்கத்தில் அன்றைய ஸ்ரீலங்கா பல்கலைக் கழக உபவேந்தர் திரு. எல் எச். சுமணதாசவால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டபீடத்தை ஆரம்பிக்கும்படி என்னால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் அதற்கும் 10 வருடங்களுக்குப் பின்பே விடுக்கப்பட்டது. அதுவும் தாங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களில் கல்விகற்க முடியாதநிலையில் பல இடம் பெயர்ந்த மாணவர்களின் அவலநிலை காரணமாகவே விடுக்கப்பட்டது.

மருத்துவபீடம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டபொழுது 10 புத்தகங்கள்கூட இருக்கவில்லை. காலப்போக்கில் அதற்குரிய நூல் நிலையம் அமைக்கப்பட்டது. இந்தப் பீடம் இதுவரை 39 வைத்திய கலாநிதிகளை உருவாக்கியுள்ளது. விரைவில் இன்னும் ஒரு பகுதியினர் தேர்ச்சிபெறவுள்ளனர்

[6-ம் பக்கம் பார்க்க]

## அலரிக்காயை பிள்ளைகட்கு கொடுத்துதானும்உண்டதாய்!

(திருகோணமலை)

இனிப்புத் தடவப்பட்ட அலரிக்காய்களைத் தனது இரண்டு புதல்விகளுக்கும் கொடுத்துத் தானும் உண்ட 30 வயது நிரம்பிய தாய் திருகோணமலை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அலரிக்காயை உண்ட இரு புதல்விகளான 14 வயது நிரம்பிய மாக்கரட் மேரி, 13 வயது நிரம்பிய அமரா மேரி ஆகியோர் உயிர் தப்பினார்கள்.

அன்புவழிபுரக் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து திருகோணமலை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஜனாப் அலி அக்பர் மரண விசாரணை நடத்தினார்.

பி. சரோஜா, எஸ். விமலா ஆகிய பெண்கள் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில், "இறந்தவரின் வீட்டினுள் இருந்து சிலர் வாந்தி எடுக்கும் சப்தம் கேட்டு ஓடிப் போய்ப் பார்த்ததாகவும், என்ன நடந்தது என்று கேட்டபோது, ஏதோ அம்மா சில உருண்டைகளைச் சாப்பிடத் தந்ததாகவும் சொன்னார்கள்" என்றுதெரிவித்தனர்.

இறந்தவரின் மரணம் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது உயிர்தப்பிய அவரின் இரு புதல்விகளும் திருமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள். (கு)

## தன்னலமற்ற பணிபுரிந்த ஞானசாரியார் அதிபர்

யாரும் எதிர்பார்த்திராதவாறு காலன் தன் வலையில் சிக்க வைத்த நம் ஞானசாரியார் கல்லூரி அதிபர், அவர் காலன் அடைந்து இன்றுடன் ஒரு மாதம் கழிந்து விட்டது. எமது கல்லூரி அதிபராகப் பதவி ஏற்று சுமார்பத்து வருடங்கள் தன்னலமற்ற பணி புரிந்தவர் அவர். அதிபருக்கே உரிய கம்பீரமான தோற்றப் பொலிவு, அடக்கம், நாவன்மை முதலியவற்றை தன்னகத்தே அடக்கிய நற்தலைவர் விடுதலைக் காலத்திலேயே நம்மவர்களிடமிருந்தும் விடுதலை பெற்றுவிட்டார் அமரர் திரு வே. க. நடராஜா.

எமது பாடசாலையின் முன்னேற்றத்தையும், மாணவர்களின் ஆக்கங்களையும் புது வழியில் செலுத்தி புத்துயிர் ஊட்டியவர் அமரர். "குறையப் பேசு நிறையச் செய்" என்ற வாக்கியத்திற்கு இணங்க தனது இலட்சியத்தை அமைத்துக்காட்டிய இலட்சிய புருஷர் அவர். "கற்பது கல்வி மாத்திரமல்ல ஒழுக்கமும் கூடவே" என்பதை நம்மவர்களுக்குத் தெளிவாக்கிய நம் அதிபரை நினைக்கும்போது மாணவஉலகு துன்பக்கடலில் ஆழ்கிறது.

விடுமுறை முடிந்து பாடசாலை தொடங்கும்போது ஆரவாரத்துடன் செல்லவேண்டிய மாணவர்களை திகைக்கவைத்துவிட்டார் நம் தலைவர். ஒரு மாதத்துக்கு முன் நம்மிடம் அதிர்ச்சியையும், அளப்பரிய இழப்பையும் கையளித்து அன்னாரது குடும்பத்தினரை நட்டாற்றில் விட்டு கடவுளின் காலடியில் சரணடைந்துவிட்டார். ஆசிரியர் குழாம் நற்தலைவரை இழந்து தவிக்க, மாணவர்கள் மனம் அனலிடைப்பட்ட மெழுகுபோல் துடித்தது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- பொ மரகதி
(பழைய மாணவி)

இன்று மட்டும்
**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
(புதிய பிரதி-கலர்)

13-2-84 வரை
**மனோகரா** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார் - நாகேஷ்
**மீனவ நண்பன்**
(கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
இயற்கை கொஞ்சும்
அழகிய மலேயா நாட்டின்
மண்நாட்டுப் பின்னணியில்
"வேண்டும் வேண்டும்
உங்கள் உறவு வெண்
பனித் தென்றல் உள்ள
வரையும்... என்று
கானமிசைத்துப் பாடிய
காதலர்களின் கண்ணீர்க்
கதை! வேறுபட்ட கதை
யம்சம் கொண்ட A. C.
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
நடித்த
**வசந்தத்தில் ஓர் நாள்**
(ஈஸ்மன் கலர்)

## இலட்சார்ச்சனை

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது தொடர்ந்து பத்துதினங்கள் இலட்சார்ச்சனை நடைபெறும். தினமும் காலை அபிஷேக ஆராதனையும், பூசையும் நடைபெற்று இரவு இலட்சார்ச்சனை நடைபெறும். மாசிமகத்தன்று காலை சுழிபுரம் திருவடி நிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## சுவீப முடிவுகள்

கொழும்பு]

தேசிய லொத்தர் சபையின் 956வது சீட்டிழுப்பு நேற்று முன்தினம் இழுக்கப்பட்டது. முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு
**09 O 0498**
ரூ. 2,00,000

2-ம் பரிசு
**14 M 0020**
75,000

3-ம் பரிசு
**13 M 0516**
25,000

தலா ரூபா 1214-20 சதம் ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 04 A 0945 | 10 A 0115 |
| 12 A 0033 | 18 A 0825 |
| 01 B 0841 | |
| 12 B 0535 | 15 B 0358 |
| 12 C 0452 | 15 C 0168 |
| 01 D 0112 | 06 D 0077 |
| 06 D 0356 | 24 D 0414 |
| 15 E 0839 | 20 E 0269 |
| 14 F 0836 | 23 F 0553 |
| 06 G 0-96 | 10 G 0066 |
| 10 G 0118 | 14 G 0347 |
| 19 G 0223 | 21 G 0463 |
| 01 H 0672 | 03 H 0887 |
| 05 H 0909 | 16 H 0863 |
| 18 H 0394 | 19 H 0740 |
| 02 J 0320 | 13 J 0484 |
| 17 J 0875 | 18 J 0153 |
| 21 J 0625 | |
| 01 K 0393 | 04 K 0413 |
| 08 K 0338 | 11 L 0998 |
| 14 L 0710 | 15 L 0159 |
| 18 L 0853 | 22 L 0049 |
| 23 L 0041 | 01 M 0752 |
| 17 M 0809 | 18 M 0098 |
| 01 N 0186 | 02 N 0824 |
| 02 N 0943 | 10 N 0281 |
| 14 N 0861 | 24 N 0022 |
| 16 O 0939 | 19 O 0871 |
| 24 O 0637 | 05 P 0215 |
| 06 P 0075 | 06 P 0829 |
| 11 P 0008 | 15 P 0220 |
| 23 P 0369 | 05 Q 0090 |
| 13 Q 0813 | 14 Q 0093 |
| 15 Q 0541 | 20 Q 0532 |
| 22 Q 0662 | 06 R 0437 |
| 08 R 0964 | |
| 12 R 0586 | 16 R 0291 |
| 21 R 0517 | 24 R 0594 |
| 04 S 0505 | 15 S 0377 |
| 23 S 0136 | 02 T 0924 |
| 03 T 0682 | 04 T 0122 |
| 12 T 0822 | 14 T 0527 |
| 17 T 0541 | |
| 22 T 0294 | 22 T 0781 |
| 11 U 0336 | 15 U 0289 |
| 07 V 0366 | 22 V 0741 |
| 04 W 0942 | 14 W 0964 |
| 20 W 0553 | 10 X 0074 |
| 19 Y 0362 | 06 Z 0640 |
| 10 Z 0311 | 16 Z 0755 |
| 19 Z 0113 | 21 Z 0113 |
| 21 Z 0476 | 23 Z 0151 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## மறைந்து ஒருவருட நிறைவஞ்சலி
### சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் யோசவ்



பத்திநாதன்''

மறைந்த எம் தந்தைக்காக சில்லாலை கதிரை மாதா ஆலயத்திலும் நாரந்தனை புனித யேதுருபாவுலு ஆலயத்திலும் மாசி 13-ந் திகதி திங்கட்கிழமை காலை 6-30க்கு திருப்பலி நிறைவேற்றப்படும். மாசி 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 பணிக்கு எமதில்லத்தில் அஞ்சலிப் பிரார்த்தனை நடைபெறும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிள்ளைகள்

சில்லாலை 692

# கைலாசபதி கலையரங்கம் திறந்துவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தை, யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும், மறைந்த பேராசிரியர் கைலாசபதியின் தந்தையாரான திரு கனகசபாபதியும் திறந்துவைத்தனர்.

இக் கலையரங்கில் திறப்பு விழாவன்று யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட விரிவுரையாளர்களினதும் மாணவர்களினதும் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நுண்கலைப்பீட மாணவர்களின் பிருந்தகானம், தசாவதாரம் நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கைலாசபதியின் கலையரங்கிலேயே, யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. (மா)

## சங்கக்கடையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை வீதிக் கிளையில் இடம் பெற்றுள்ளது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டணி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி குழுவில் திரு குமார் பொன்னம்பலம், கலாநிதி நீலன் திருச்செல்வம், திரு. ஆர். சம்பந்தன், திரு. மோதிலால் நேரு, திரு. பெரிசுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழு இன்று வியாழக்கிழமை முதல் கூடி, நிலைமையை ஆராயும்.

# இலங்கைக்கு 7 கோடி டாலர் அமெரிக்க உதவி

வாஷிங்டன் பெப். 8

இலங்கைக்கு 7 கோடி 38 லட்சம் டாலரை உதவியாக வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் அமெரிக்க காங்கிரஸிடம் கேட்டுள்ளார். (வெ)

# கல்லோயா திருமலை ரயில் சேவை

[கொழும்பு]

கல்லோயாச் சந்திக்கும் திருகோணமலைக்குமிடையில் மீண்டும் வழமைபோல்ரயில்சேவை நடைபெற்று வருவதாக ரயில்வே பகுதி அறிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக இந்த ரயில் சேவை கடந்த சிலதினங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. [வெ]

# இப்படியும் நடக்கிறது

சுழிபுரம், பண்ணாகத்தைச் சேர்ந்த ஓர் அம்மணி வந்தார். ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

ஒருமுறை பார்த்தோம் புரியவில்லை சிலரிடம் கொடுத்து அர்த்தத்தை அறிந்து கொள்ள முயற்சித்தோம். ஓய்வூதியம் சம்பந்தமான கடிதம் என்று மொழிபெயர்க்கப்பட்டது.

இதன் கதைதான் நேற்று வந்தது. தொடர்கதை இன்று நீடிக்கிறது.

நேற்றுக் காலை யாழ். செயலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது:

"சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு தனிச் சிங்களத்தில் ஒருகடிதம் வந்ததாகவும், அதில் அவரது ஓய்வூதிய நிலுவைப் பணத்தை யாழ் செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும், குறித்த கடிதம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்துதான் அனுப்பப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது இதில் இக் கடிதம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தான் அனுப்பப்பட்டதென்ற கூற்று தவறானது. இக்கடிதம் கொழும்பிலுள்ள கணக்கு—கொடுப்பனவு பணிப்பாளரினால் எமக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட்டதுடன், அதன் பிரதி மட்டும் தகவலுக்காக சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்தவருக்கு பணிப்பாளரினால் கொழும்பிலிருந்து நேரடியாக அனுப்பப்பட்டதாகும்."

தான் அறியாத சிங்களம் தனது பிடரிக்குச் சேதம் என்பது எவ்வளவு பெரிய உண்மை!

"ஊடுருவி"

# இலங்கையும் பங்குபற்றும்

(கொழும்பு)

ஆசிய பசுபிக்கின் உணவு சந்தைப்படுத்தும் ஸ்தாபனத்தில் இலங்கையும் சேரவுள்ளதாகக் கல்வி அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

# இளைஞன்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினைந்து வயது மிக்க இந்த இளைஞன், மேற்படி மைதானத்தின் பெரிய திற் சுவரைக் கடந்து செல்ல முயற்சித்த போது ஜீப்பில் சென்ற பொலிஸார் இளைஞனைக் கைது செய்தாகத் தெரிவிக்கப்பட்டது

இந்த இளைஞனிடமிருந்து சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

# வெள்ளக் கொடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த தயார் கிருமிநாசினி அருந்தியதாகவும், பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

இம்மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மட்டக்களப்பு மரணவிசாரணை அதிகாரி த. சிவநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [சூ-வெ]

# யாழ். அபிவி---

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 1984—1988க்குரிய ஒன்றிணைப்புத்திட்டம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினால் தயாரிக்கப்பட்டு சபையாலும் செனற்றினாலும் அங்கீகரிக்கப்பட்டு இப்பொழுது பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காகவுள்ளது. அதனில் விவசாயம், சட்டம், பொறியியல், பல்வைத்தியம் ஆகிய பீடங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முட்டுக்கட்டை போடாவிட்டால் இப்பீடங்களில் 1985ல் முதலாவது வகுப்புக்கள் தொடங்கப் படவேண்டும்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 1984-1988க்குரிய ஒன்றிணைப்புத் திட்டம் உத்தேச பொறியியல் பீடம்பற்றி ஆலோசனைக்குழுவின் அறிக்கை உத்தேச விவசாய பீடம் பற்றிய செனற் உபகுழுவின் அறிக்கை ஆகியவற்றைத்தாங்கள் பரிசீலனை செய்தால் இப்பொழுது இல்லாத பீடங்களான சட்டம, பொறியியல், பல் வைத்தியம், விவசாயம் போன்ற பீடங்களை ஆரம்பிக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கை பொறுப்புணர்ச்சியுடனும் மிகக் கவனமாக ஆராய்ந்த பின்புமே விடுக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வீர்கள். (க)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சின்னத்துரை

சின்னத்தம்பி சின்னத்துரை அவர்கள் 8 2-84ல் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சண்முகரத்தினம், பாலசுந்தரம், தவமலர், செல்வமலர், சஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேற்பிள்ளையின் மாமனாரும், அகிலன், விபுலன், சுரம்பியாவின் பேரனும், அரசம்மா, கனகலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார். தகனக்கிரியைகள் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் 9-2-84 வியாழன் பி. ப. 2 மணிக்கு நடைபெறும் உற்றார், உறவினர் யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

704

# மரண அறிவித்தல்

## சுப்பையா சிவசுப்பிரமணியம்

அளவெட்டி சுப்பையா சிவசுப்பிரமணியம் சிவபதமடைந்துவிட்டார். இவர் முல்லைத்தீவு மாவட்டக் கல்வி அதிகாரியும், அருணோதயா, விக்ரோறியா, கோப்பாய் கிறிஸ்ரியன், மகாஜனா ஆகிய கல்லூரிகளின் முன்னாள் அதிபரும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சிலோன் பீறின்ரேஸ் சிவானி, யாழ் பல்கலைக்கழகம் அனுஷா, பரியோவான் கல்லூரி சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் ஈமக்கிரியைகள் இன்று 9-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு அளவெட்டியில் நடைபெறும்

690

# மரண அறிவித்தல்

## திருமதி ஆச்சிப்பிள்ளை

கோப்பாய் தெற்கு கல்வளவு காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. வ முத்துக்குமாரசுவாமி அவர்களின் துணைவியார் திருமதி ஆச்சிப்பிள்ளை காலமானார். அன்னார், கொழும்பு ஹட்டன் நெஷனல் வங்கி திரு. வன்னியசேகரம், செல்வி புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சித்ராமணியின் அன்பு மாமியாரும், சுதர்ஷினி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார். பூதவுடல் இன்று மாலை ஐந்து மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் இலலத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். உற்றாரும் உறவினரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

மு. வன்னியசேகரம்
கல்வளவு, கோப்பாய் தெற்கு. (706)

# மரண அறிவித்தல்

## திரு. க. பொன்னம்பலம்

கொக்குவிலைச் சேர்ந்த இளைப்பாறிய பிரதம தபாலதிபர் திரு.க.பொன்னம்பலம் காலமானார். இவர் திருமதி பசுபதி கிருஷ்ணபிள்ளையின் அன்புச் சகோதரரும், இராமநாதன் (சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்), லக்ஷ்மிதேவி, சுந்தரநாதன் (மத்திய வங்கி), விமலநாதன், காந்தலக்ஷ்மி, காலஞ்சென்ற சிவலோகநாதன், குமாரநாதன் (இன்டர் கொன்டினென்டல் ஹோட்டல்-அபுதாபி), டாக்டர் போகநாதன், சீதாலஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலகிட்ணர் (உயர்நீதிமன்ற நீதிபதி-மட்டக்களப்பு), சுபத்திராதேவி (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), எ. துரைராசா (சி.ஐ.சி-கொழும்பு), விமலராசா ('டிமோ' கொழும்பு), சந்திரா சிவலோகநாதன் (ஹட்டன் நாஷனல் வங்கி-கொழும்பு), சாயி பிரதீபா, கிருபாதேவி, செல்வராணி (மத்திய வங்கி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை நான்கு மணிக்கு கொக்குவில் ஸ்ரேசன் வீதியிலுள்ள 'கனகஜோதி' இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

'கனகஜோதி', ஸ்ரேசன் வீதி—கொக்குவில்.

705

# மரண அறிவித்தல்

## திரு. த. செல்வராசா

அல்வாய் தெற்கு பழனிப் பதியைச் சேர்ந்ததேவரையாளி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு. த செல்வராசா அவர்கள் 8-2-84ல் காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், செல்வலிங்கம் (C. O), சந்திரலிங்கம் (ஜேர்மனி), ஆனந்தலிங்கம், சோதிலிங்கம், அட்ஜெயலிங்கம், குமரலிங்கம், சுபேந்திரலிங்கம், றஜனி ஆகியோரின் அன்புத்தந்தையும், முன்னாள் உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு த இராஜலிங்கம், துரைராசா (ஆசிரியர்), திருமதி மீனாட்சியம்மா சாம்பசிவம், காலஞ்சென்ற தம்பராசா ஆகியோரின் சிரேஷ்ட சகோதரரும், காலஞ்சென்ற டாக்டர் இ சாம்பசிவம், ப சபாரத்தினம், ப. நவரத்தினம், செ. சதானந்தன் (அதிபர்) ஆகியோரின் மைத்துனரும், இ. இரத்தினராசா, (நைஜீரியா], இ.கந்தவனம் (P H I), டாக்டர் க. வல்லிபுரம், க. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும், நாகேந்திரன் (சாம்பியா), தேவராஜன் (நைஜீரியா) நடராஜா (இலங்கை வங்கி, பருத்தித்துறை), ஸ்ரீதரன் (மக்கள் வங்கி, நெல்லியடி) ஆகியோரின் மாமனாரும், யோகலிங்கம் (சுங்க அதிகாரி), சத்தியலிங்கம் (பொறியியல் மாணவன்), அசோகலிங்கம் ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் இன்று 9-2-84 வியாழன் பி. ப. 3-00 மணிக்கு, அல்வாய் தெற்கு பங்குவம்படி மயானத்தில் நடைபெறும்.

அல்வாய் தெற்கு, அல்வாய். — குடும்பத்தினர், செ. சதானந்தன்

699

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, ... அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under No. R 100236/81. Eelanadu- P. O. Box 49, Telephones 22389 — 24126.